மலர் 7 இதழ் 11

சிறுவர் மாத இதழ்

# வெற்றிமணி

பாலைதீவுப் படகு விபத்தாற் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்கிறோம்.

— வெற்றிமணி

கௌரவ ஆசிரியர் :
மு. க. சுப்பிரமணியம்

15-3-70 சதம் 30

நங்கையர் விரும்பும் நவநாகரீக

★ நகைகளுக்கும் ★ வைரங்களுக்கும்

புகழ்பெற்று விளங்கும் ஸ்தாபனம்

# கே. என். எம். மீரான் சாஹிப்

"தங்கப்பவுண் நகை மாளிகை"

கன்னாதிட்டி தொலைபேசி: 585 யாழ்ப்பாணம்

*Visit*

## K. N. M. MEERAN SAHIB

JEWELLERS & DIAMOND MERCHANT

"SOVEREIGN PALACE"

**KANNATHIDDY** *Dial:* 585 **JAFFNA**



## சிற்பங்கள் தேவையா?

★ மரச் சிற்பங்கள்! ★ பொம்மைகள்!

★ தேர்க் கட்டைகள்

★ வெள்ளெருக்கன் வேரில் சிறிய விநாயகர்

மற்றும் பல்வேறு அழகான சிற்பங்களைப் பெற

இன்றே எமக்கு எழுதுங்கள்!

**சிற்பி நெல்லையப்பர்,**

திருப்பாலைத்துறை, பாவனாசம், P. O.

தஞ்சை மாவட்டம், தமிழ்நாடு.



கௌரவ ஆசிரியர்: மு. க. சுப்பிரமணியம்

# ✶ வெற்றிமணி ✶

## வருட சந்தா

பொங்கல் மலர்
தபாற்செலவுட்பட

| | | |
|---|---|---|
| இலங்கை | ரூபா. | 4-00 |
| இந்தியா | ரூபா. | 4-00 |
| மலாயா | $ | 4-00 |

✳ ✳

## விளம்பர விகிதம்

| | | |
|---|---|---|
| வெளி அட்டை | ரூபா. | 75-00 |
| உள் அட்டை | ரூபா. | 60-00 |
| முதற் பக்கம் | ரூபா. | 50-00 |
| உட் பக்கம் | ரூபா. | 40-00 |

தொடர்ந்து விளம்பரஞ்செய்யின்
15 வீதக் கழிவுண்டு
விபரங்களுக்கு எழுதுக.

வெற்றிமணி
முள்ளியவளை — இலங்கை

## பொருளடக்கம்


தலையங்கம் ... ... ... ... 3
ஓடி ஒளித்திடக் காரணமேன் ... 4
நைல்நதிப் பள்ளத்தாக்கு ... 6
அவமானம் ... ... ... ... 8
உழுதுண்டு வாழ்வாரே ... ... 9
தைப்பொங்கல் ... ... ... 11
கவிதை அரங்கம் ... ... ... 13
கணக்கியலுக்கோர் அறி ... ... 17
அகிலத்துக்கோர் அருட்கவி ... 21
ஞானோதயம் ... ... ... ... 23
சிரிப்பே சிறப்பு ... ... ... ... 24
இளநீரில் ... ... ... ... ... 25
நேயர் குரல் ... ... ... ... 26
உங்களுக்குத் தெரியுமா? ... 27
இளைஞர்களுக்கு இலக்கியம் ... 28
மாணவர் மன்ற அங்கத்தவர் ... 28

— வெற்றிமணி —

வெற்றிமணி டாண் எனவே விண்முட்ட ஒலித்திடுவாய்
நற்றமிழாம் எங்கள்மொழி நலமுற ஒலித்திடுவாய்

மலர் 7 | 15-3-70 ஞாயிற்றுக்கிழமை | இதழ் 11

# தேற்றம்

**பா**லைதீவிற்குச் சென்ற படகு கவிழ்ந்துவிட்டது. விதி விளையாடிவிட்டது. ஐம்பத்தெட்டு அடியார்கள் சாவை அரவணைத்துக் கொண்டனர். அவர்களுட் பால் மணம் மாறுப் பச்சிளம் பாலகர்கள் பலரின் பரிதாப நிலையை நினைக்க நினைக்க நெஞ்சம் வேதனையால் உருக்குலைகின்றது.

யாழ்ப்பாணக் குடாநாட்டிலன்றி இலங்கையிலேயே இது போன்ற விபத்து இதுவரை நடக்கவில்லை என்று வரலாறு நெஞ்சில் கை வைக்கின்றது. பக்தர்கள் தெய்வத்தை நோகின்றனர். உற்ருர் உறவினர்கள் ஓவென்றழுது புலம்புகின்றனர். யாழ்ப்பாணக் குடாநாடேசோக வெள்ளத்தில் மூழ்கிக் கிடக்கின்றது.

பெற்ருர்-உற்ருர்களை இழந்து ஆதரவற்றிருக்கும் அனைவருக்கும் வெற்றிமணி சார்பிலும் வெற்றிமணி வாசகர்கள் சார்பிலும் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்ருேம். மண்ணுலக வாழ்வை நீத்த அன்பர்களின் ஆன்மாக்கள் சாந்திபெற இறைவனை இறைஞ்சுகின்ருேம்.

இழப்பு ஈடிணையற்றது. துயர் எல்லையில்லாதது. ஆயினும் வாழ்க்கை நிலையாமையை எண்ணி ஓரளவு தேற்றம் பெறுவோமாக. நடப்பது நடந்துவிட்டது. இன்றிருப்பார் நாளையிருப்பதில்லை. என்றும் இருப்போம் என்றும் நாம் வாழ்வதுவுமில்லை. என்றும் இருப்பவன் ஒருவனே! அவனே எல்லோரையும் வழி நடத்திச் செல்கின்ருன். அவன் தாள் வணங்கி இனி ஆகவேண்டியதைக் கவனிப்போமாக!

ஆதரவற்ற குடும்பங்களுக்கு சொல்லால் மட்டுமன்றிச் செயலாலும் அனுதாபம் தெரிவிக்க அன்பர்கள் பலர் முன்வந்திருப்பது மகிழ்ச்சிக்குரியது. சிறுதுளி பெருவெள்ளம். ஒவ்வொருவரும் தம்மாலியன்ற பொருளுதவி புரிதல் புண்ணியமாகும்!

**

# ஓடி ஒளித்திடக் காரணமேன்?

இரசிகமணி கனக. செந்திநாதன்

**அ**வள் சிறுமியாக இருந்த காலத்தில் அவனோடுதான் விளையாடினாள். அவன் அவளுக்கு முறையான அத்தான் தான். அக் காலத்தில் - பாவாடை கட்டிய காலத்தில் - வெட்கம் என்பதையே அறியாத சிறுமிதான். ''எடியே! இப்பவே அத்தானைக் கைக்குள் போட்டுக் கொண்டாயா?'' என்று அவள் பாட்டி கேலிசெய்த போதும் ''போ! பாட்டி வாடா நாங்கள் விளையாடப் போவோம்'' என்று கை கோர்த்துஓடியவள்தான். ஆனால் இன்று...அவளைக் காணவே முடியவில்லை; முக தரிசனம் கிடைப்பதேயில்லை. கண்டாலும் ஓடி ஒளித்துக்கொள்கிறாள். காரணம் பருவம் தந்த பரிசு!... ஆமாம். வெட்கம்.

என்னிடமா வெட்கம்? சொந்த அத்தானிடா வெட்கம்? நாங்கள் ஓரிரு நாட்கள் பழகியவர்களா? பிறந்தன்று தொடக்கம் பழகியவர்களாச்சே. பழக்கமென்றால் வெறும் பேச்சோடு மாத்திரம் நின்றவர்களா? கூத்து, கும்மாளம், விளையாட்டு. அப்பப்பா? ஒரு நாள் நாங்கள் பந்தல் கட்டிப் பொய்ச் சோறு-கறி காய்ச்சி விளையாடியதைப் பற்றிச் சொல்லட்டுமா?

''படர்ஆலம் விழுதனைத் தொடுத்துமே முடித்த
பந்தரில் நீதந்த விளையாட்டுச் சோற்றை
'உதவாது' என்றுநான் உதைத்தெழ நீயும்
'ஊதாரி' என்றெனை ஏசித் தொலைத்தும்
இதமாக என்னயல் வந்துநின் றிளித்து
'இந்தாங்க கோபமா?' என்றல்லோ இரந்தாய்
மதமாநான் இன்றுன்னை எண்ணி இளைத்தேன்
மாதரசே தாமதமேன் ஏதோஉன் உள்ளம்!''

வீட்டிலே பெரியவர்கள் எதை எதைச் செய்கிறார்களோ அவைகளை அவதானித்து அப்படியே செய்வது குழந்தைகளின் வழக்கம். பொய்ச் சோறு காய்ச்சி விளையாடும் போதும் அவன் 'உதவாது' என்று உதைக்கிறான். அவள் 'ஊதாரி' என்றுஏசுகின்றாள். பிறகு ''இந்நாங்க கோபமா''? என்று இதமாகக் கேட்கிறாள். கவிஞர் இந்தக் குழ்ந்தை

களின் 'சோறு–கறி விளையாட்டை' அருமையாகப் படைத்திருக்கிறார்.

அடுத்த காட்சியைப் பாருங்கள்; இன்னும் அருமையாக இருக்கிறது.

''தொட்டில் அசைத்திடத் தூளிகை கேட்டாய்
தோரண மாய்ஆலின் விழுதை அமைத்தேன்
பட்டுத் துணியினுற் சுற்றிய கற்சேய்
பள்ளி கொள்ளஎனப் பாட்டும் இசைத்தேன்
வட்டில் எனஆலின் இலையை எடுத்து
வார்த்த பொய்க் கூழினைஉண்டு களித்தேன்
மெட்டி ஒலிக்க அணைகுவை இன்றே
மெல்லெனப் போயின் றெழிக்குதல் நன்றே''

(கேய் - பிள்ளை) பட்டுத் துணியை ஒரு சிறிய கல்லுக்குப் போட்டுப் பிள்ளையாக்கி, ஆலம் விழுதைத் தொட்டிலாக்கிப் படுத்தி 'ஆராரோ' பாடும் காட்சியை - குழந்தைக் காட்சியை - நம் மனதில் அழியாத சித்திரமாக்கியிருக்கிறார் கவிஞர். ''வட்டில் என ஆலின் இலையை எடுத்து வார்த்த பொய்க் கூழினை உன்டு களிக்கும்'' காட்சிக்கு எத்தனை சபாஷ் போட்டாலும் தகும்.

'காதற் கவிதை' என்று நினைத்திருப்பீர்கள். அல்ல. குழந்தைகள் விளையாட்டு. இந்தக் கவிதைகளையும் இதைப் போல 'கிளுகிளுப்பு' உணர்ச்சிகளை ஏற்படுத்தும் கவிதைகளையும் பாடியிருப்பவர் கவிஞர் 'தில்லைச் சிவன்'. அவருடைய சமீபப் படைப்பாக வெளிவந்திருக்கும் நூல் - கவிதைத் தொகுதி - தாய். நல்ல படைப்பு!

———


## வெற்றிமணி கிடைக்குமிடங்கள்

Meenambika News Agency,
235, Lower Street,
BADULLA.

அன்பு புத்தகசாலை,
27-D பெரிய கடை,
யாழ்ப்பாணம்.

# 7. நைல் நதிப் பள்ளத்தாக்கு

வி. கந்தவனம் பீ. ஏ.

1. நைல் நதிப் பள்ளத்தாக்கு

பண்டைக் காலத்தில் நைல் நதிப் பள்ளத்தாக்கு நாகரிகத்திற் சிறந்ததவோர் பகுதியாக விளங்கிற்று. இன்றும் ஆபிரிக்காவில் மிகவும் பெயர்பெற்ற பகுதியாக இப் பள்ளத்தாக்கு விளங்குகின்றது.

நைல் உலகின் மிக நீண்ட ஆறுகும். இது 4160மைல் நீளமுடையது. மத்திய ஆபிரிக்காவிலுள்ள விக்ரோறியா ஏரியில் இந்நதி ஊற்றெடுத்து வெள்ளை நைல் என்ற பெயரோடு பாய்ந்து பின் சகாராவின் கிழக்குப் பகுதிக்கூடாக வடக்குத் திசையாகப் பாய்ந்து மத்தியதரைக் கடலினுள் விழுகின்றது. இது கடலை யடையுமிடத்திற் பரந்த கழிமுகத்தை உருவாக்கியுள்ளது. ஆறு கொண்டுவரும் வண்டல்மண் ஆற்றுமுகத்திற் படிந்து ஆற்றின் போக்கைத் தடுப்பதனால் ஆறு பல கிளைகளாகப் பிரிந்து கடலை அடைகின்றது. இப்பகுதி ஆற்றின் கழிமுகம் எனப்படும்.

நைலின் பிரதான கிளை ஆபிரிக்காவின் கிழக்கில் அமைந்துள்ள அபிசீனிய மேட்டுநிலத்திலிருந்து ஊற்றெடுத்து வரும் நீல நைல் ஆகும். வெள்ளை நைலும் நீல நைலும் காட்டூம் என்னும் இடத்திற் சந்திக்கின்றன. பகுரெல், கசால், சோபாட்டு, அற்பரு என்பன நைலின் மற்றைய கிளைகளாகும். நைல் ஆறு பெரும் நீர்வீழ்ச்சிகளைக் கொண்டது. இதனால் இந் நதியிற் போக்குவரத்துச் செய்தல்முடியாது. நைல் நதி பாயும் பிரதான பகுதி சகாராப் பாலை நிலத்தின் கிழக்குப் பகுதியாகும். ஆனால் நைல் நீர்ப் பாய்ச்சுவதால் இப் பிரதேசம் பாலைநிலமாக அமையவில்லை.

வெள்ளை நைலும் ஏனைய பிரதான கிளை ஆறுகளும் எப்பொழுதும் மழை பெறும் மத்திய கோட்டுப் பிரதேசங்களிலிருந்து ஊற்றெடுத்து வருவதால் நைல் நதி ஒருபோதும் வறட்சியடைவதில்லை. அபிசீனிய மேட்டுநிலம் கோடையில் மழையைப் பெறுகின்றது. இக்காலத்தில் நீலநைல் கொண்டு வரும் அதிக நீரையும் பெற்று நைல் பெருக்கெடுத்தோடும். வருடத்துக்கொருமுறை ஏற்படும் இவ் வெள்ளப் பெருக்குக் காரணமாக நைல் நதிப் பள்ளத்தாக்கில் வண்டல்மண் படிகின்றது.

### 2. நைல் நதி நாடுகள்

எகிப்தும் சூடானும் நைல் வடிநிலத்தில் அமைந்துள்ள முக்கிய நாடுகளாகும். போதிய நீர் கிடைப்பதனுல் இந் நாடுகள் முன்னேற்றமடைந்துள்ளன. அணைகள் கட்டி, நீரைச் சேகரித்து, வாய்க்கால் வழியாகப் பாய்ச்சி இந்நாடுகளிற் பயிர்ச்செய்கை செய்யப்படுகின்றது. எகிப்து 'நைல் நதியின் வரப்பிரசாதம்' எனப்படும். இந்தியாவின் சிந்துப் பிரதேசம் சிந்து நதியால் வளமுடையதாயிருப்பதைப்போன்று எகிப்தும் நைல் நதியால் வளம்பெறுகின்றது. இங்கு அசுவான் என்னுமிடத்துக் கண்மையில் ஒரு பரந்த நீர்த்தேக்கம் அமைக்கப்பட்டுள்ளது.

எகிப்து உலகிற் பருத்திச் செய்கைக்குப் பெயர்பெற்றது. எகிப்தின் பருத்தி உலகச் சந்தையில் உயர்ந்த தரமுடையதாகக் கருதப்படுகின்றது. இங்கு கோதுமை,பார்லி, நெல், கரும்பு என்பனவும் பயிரிடப்படுகின்றன. அண்மைக் காலத்திலிருந்து எகிப்து கைத்தொழிற் துறையிலும் முன்னேறி வருகின்றது. கெயிரோ எகிப்தின் தலைநகரமாகும். இது பிரதான விமானத்தளமாகவுள்ளது. போட்செட், அலச்சாந்திரியா என்பன எகிப்தின் பிரதான துறைமுகங்களாகும்.

சூடான் நாடும் பருத்திச் செய்கைக்குப் பெயர் பெற்றது. தினை, சோளம், நிலக்கடலை என்பன சூடானில் விளையும் பிற பயிர்களாகும். கால்நடை வளர்ப்பும் இங்கு நடைபெறுகின்றது. காட்டூம் சூடானின் தலைநகரமாகும். இது ஒரு முக்கிய விமானநிலையமாகவுள்ளது. ஆபிரிக்காவின் நைல் நதிப் பள்ளத்தாக்கில் அராபியரே அதிகமாக வசிக்கின்றனர்.

### 3. எதியோப்பியா

நீல நைல் அபிசீனிய மேட்டு நிலத்தில் ஊற்றெடுக்கின்றது; இம் மேட்டு நிலம் அமைந்துள்ள நாடு அபிசீனியா அல்லது எதியோப்பியா எனப்படும். எதியோப்பியா நைல் நதிக்குக் கிழக்கில் அமைந்துள்ளது. இதற்கு வடக்கிற் செங்கடல் உள்ளது. கோப்பி, பருத்தி, தினை என்பன இங்கு பயிராகின்றன. கால்நடை வளர்ப்பும் நடைபெறுகின்றது. அடிசபாபா இதன் தலைநகராகும்.

# அவதானம் (51)

மு. க. சுப்பிரமணியம்

நாதன் ஆறுந்தரத்தில் படிக்கும் ஒரு மாணவன். மிகவும் கெட்டிக்காரன். ஆர்வம் மிகுந்தவன். எதற்கும் முன்னின்று விருப்புடன் செய்வான். பாடசாலையிலும் சரி, வீட்டிலும் சரி சொன்னவுடன் செய்வான் நாதன்.

ஒருநாள் வீட்டிலே காலையில் நாதனின் அம்மா வேலை செய்துகொண்டிருந்தார். காலைச் சாப்பாடு செய்ய நேரம் போதியதாக இல்லை. எனவே ''இன்று பாலப்பம் வாங்குவோம்'' என்றார். படித்துக்கொண்டிருந்த நாதன் உடனே எழும்பினான். அவனுக்குக் காசு இருக்குமிடம் தெரியும். காசை எடுத்துக்கொண்டு கடைக்குச் சென்றான். சிறிது நேரத்திற் கையில் ஒரு சீப்பு வாழைப் பழத்துடன் திரும்பி வந்தான்.

நாதனின் இளைய சகோதரி நாதனைப் பார்த்துச் சிரித்தாள். சிரிப்பு நிற்கவில்லை. நாதன் திகைத்தான். தொடர்ந்து சிரிப்பதைக் கண்டு ஆத்திரப்பட்டான். மற்றச் சகோதரர்களும் அங்குவந்து சேர்ந்தனர். ஒருவருக்கும் தங்கையின் சிரிப்புக்குக் காரணம் புரியவில்லை. ''தங்கைச்சி ஏன் சிரிக்கிறாய்?'' என்று நாதனின் ஐயா கேட்டார். ''அண்ணா என்ன வாங்கி வந்திருக்கிறார்? பாலப்பத்துக்கு வாழைப்பழம் வாங்கி வந்திருக்கிறார்'' என்றாள் தங்கை. எல்லோரும் ஒருமித்துச் சிரித்தனர். நாதனுக்கும் விஷயம் அப்போதுதான் தெளிவாகிற்று. எனினும் அவன் ஆத்திரப்படவில்லை. அவர்களுடன் சேர்ந்து சிரித்தான். அம்மாதானே எதையுஞ் சமாளிப்பவர். ''நாதன் பார்த்தாயா உனது அவதானக் குறைவை. நான் பாலப்பம் என்று சொன்னதைச் சரியாக அவதானிக்காதபடியால் வாழைப்பழம் வாங்கிவந்தாய். என்ன சொன்னேன் என்பது சரியாகக் கேட்காவிட்டால் திரும்ப என்னைக் கேட்டிருக்கவேண்டும். எதற்கும் அவதானம் பிரதானம். இப்படித்தான் பாடசாலையிலும் படிக்கும்போது அவதானம் இல்லாவிட்டால் படிப்பில் முன்னேற முடியாது. அவதானம் அற்றவர்கள் வாழ்க்கையிலும் முன்னேற முடியாது'' என்று புத்தி கூறினார். நாதன் அன்று தொடக்கம் எதிலும் அவதானம் உள்ளவனாக இருந்தான்.

# உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்!

செல்வி மீனும்பாள் முத்தையா

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாந்
தொழுதுண்டு பின்செல்பவர்"

உலகப் பொதுமறையாம் திருக்குறளில் திருவள்ளுவர் உழவுத் தொழிலைச் சிறப்பித்துப் பாடிய அருமைத் திருக்குறள் இது. அரசபணி, வியாபாரம், பலவகைக் கைத்தொழில்கள் செய்து வாழும் மனிதர்களை வள்ளுவப் பெருந்தகை கண்டிருக்கிறார். உழவுத் தொழில் செய்பவனையும் பார்த்திருக்கிறார். ஆழ்ந்து சிந்தித்து முடிவு செய்து அழகான கருத்துடன் 'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்' என்று முடிந்த முடிவுடன் பாடியிருக்கிறார். "உழவுத் தொழில் செய்பவர்களே உண்மையான வாழ்வு நடாத்துபவர்கள்; மற்றவர்கள் எல்லோரும் அவர்களைப் பின் தொடர்ந்து சென்று அவன் தரும் உணவை உண்டு வாழ்பவர்கள் தாம்" என்று அருமையான கருத்தைத் தெளிவுபடச் சொல்லியுள்ளார் அவர்.

"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் - வீணில்
உண்டு களித்திருப்போரை நிந்தனை செய்வோம்"

என நவயுகத்தின் புதுமைக் கவி பாரதி அறைகூவி அழைப்பதைக் கேளுங்கள். சோம்பேறிகளாக, திண்ணை தூங்கிகளாக இராமல் உழவுத் தொழிலைச் செய்து உயர்வடையுங்கள் என அவர் அழைப்பதையும், அப்படி முயற்சி செய்யாமல் வீணே நேரத்தைப்போக்கிப் பிறர் உழைப்பில் உண்டு களிக்க வேண்டாமென்று போதிப்பதையும் சிந்தனை செய்யுங்கள்!

"வரம்புயர நீருயரும்
நீருயர நெல்லுயரும்
நெல்லுயரக் குடியுயரும்
குடியுயரக் கோனுயர்வான்"

என ஔவையார் பாடியிருக்கிறார். அதாவது உழவுத் தொழில் வளர்ந்தாற்றான் குடிமக்கள் உயருவார்கள். குடிமக்கள் உயர்ந்தாற்றான் அரசு சிறப்படையும். உண்டி கொடுத்தோர்தான் உயிர் கொடுத்தோர். மக்கள் வாழ்வுக்கு உயிர்நாடி உணவு. அஃதின்றேல் மற்றை நாட்டாரிடம் நாம் பல்லிளிக்க வேண்டும். அதைவிட ஒரு நாட்டுக்கு இழிவு தருவது வேறொன்றுமில்லை. எனவே, ஒரு நாட்டின் மானம்கூட அந் நாட்டின் உழவர் கையிலே தான் தங்கியுள்ளது.

பல நாடுகள் உழவுத் தொழிலின் முக்கியத்துவத்தை உணர்ந்து அதற்கான பல திட்டங்களைத் தீட்டி உணவுத் துறையிற் தன்நிறைவு பெற்றுள்ளன. மற்றைய நாடுகளிற் பிச்சை கேட்காமல் மானத்துடன் வாழ்கின்றன. நம் நாடாகிய ஈழமும் இத்துறையிற் போதிய கவனஞ் செலுத்தி வேகமாக முன்னேறுகிறது. பழைய காலம்போல இல்லாமல் உழவுத் தொழிலைச் செய்வதற்காகப் பலவகையான இயந்திரங்கள் இக்காலத்தில் இருப்பதால் இலகுவாகச் செய்யமுடிகிறது. படித்தும் வேலையற்ற இளைஞர்கள் இப்போது உழவுத் தொழிலைக்கண்டு அஞ்சுவதில்லை. கௌரவக் குறைவு என்று மதிப்பதில்லை. இந்த நிலை ஈழத்தின் வருங்காலத்துக்கு நல்லதே!

மக்களுக்கு உயிர்ப் பிச்சை அளிக்கும் உழவர்களை அக்காலத்தில் அரசர் மதித்தனர். புலவர் போற்றிப் பாடினர். அவனும் ஏற்றமுற வாழ்ந்தான். இடைக்காலத்தில் உத்தியோக மோகம் தலைக்கேறிய சிலர் அவனை இகழ்ந்தனர். பரிகாசம் செய்தனர். இப்போது வயிற்றுப் பசி கிண்டட அவனையே மீண்டும் ஏறெடுத்துப் பார்க்கின்றனர். அவன் புகழ் மீண்டும் ஒலிக்கத் தொடங்கியிருக்கிறது.

வாழ்க உழவுத் தொழில்! வளர்க உழவர் புகழ்!!

* *

பரிசுக் கட்டுரை — 16 வயதுக்குட்பட்டவர்

# தைப் பொங்கல்

— செல்வன் ம. இளங்கோவன் —

**தைத்** திருநாள் பொங்கல் தனித் திருநாள். ஏருழவர் மெய்த் திருநாள். கண்ணீர் சிந்தி, வியர்வை சிந்தி, இரத்தம் சிந்தி வேளாண்மை செய்த விவசாயி அறுவடையின் பின் தன் உழைப்பின் ஊதியமாக - பரிசாக - மனைவி மக்களுடன் மகிழ்வுறும் திருநாள். இது தமிழர் திரு நாள் மட்டுமல்ல; தன் மானமுடைய உலக விவசாயப் பெருமக்களின் உயர்ந்த பெருநாள்.

நமது நாட்டு விவசாயி நலிவுற்று நாதியற்று, நசுக்கப்பட்டுக்கூட வாழ்கிறான். கடனிலே வளர்ந்து கடனிலே வாழும் விவசாயி தனது வாழ்நாளில் ஆண்டுக்கொரு தடவையாவது தனது முயற்சியால் உற்பத்தியான உணவை நிம்மதியுடன் உண்டு மகிழ ஓர் சந்தர்ப்பத்தைத் தைப்பொங்கல் அளிக்கிறது.

இறவாத புகழுடைய செந்தமிழ்க் காப்பியமாக சிலப்பதிகாரத்தை வடித்த இளங்கோவடிகள் ''ஞாயிறு போற்றுதும்'' எனச் சூரியனைப் போற்றினார். மழை தந்து பயிர் வளர்க்கும் அவனுக்கு நன்றிக் கடன் செலுத்தும் ஒரு திருநாளை விவசாயிகள் மேற்கொண்டுள்ளது பொருத்தமும், சிறப்புமுடையதாகும். ஆதவன் இன்றேல் பயிர்கள் வளராது; உணவு கிடைக்காது; உலகமே இயங்காது. எனவே, உலகத்தை இயக்கும் விவசாயி - உணவளிக்கும் அப் பெருமகன் - தைப் பொங்கலை ஆதவனுக்கு விழாவாகக் கொண்டான்.

ஆதவனுக்கு மட்டுமா விழாவெடுக்கிறான் விவசாயி? தன்னுடன் தோளோடு தோள் சேர்ந்து இன்பத்திலும், துன்பத்திலும் அவனது வாழ்விற் பங்கெடுக்கும் ஆவினங்களுக்கும் பொங்கல் விழா வெடுக்கிறான். பழந் தமிழ் அகராதியில் ''மாடு'' என்பது மிருகத்தைக் குறிக்கும் ஒரு சொல்லல்ல! அது தெய்வத்தைக் குறிக்கும். உழவனுக்குச் செல்வத்தை உற்பத்தி செய்யும் செல்வமாக விளங்கியது. எனவே தைப் பொங்கலுடன் மாட்டுப் பொங்கலும் எடுக்கப்படுகிறது.

பானையிலிட்ட அரிசி பொங்குவதுபோல உள்ளத்தில் உவகை பொங்க, வாழ்வு பெருக வேண்டுமென்று ஏருழவன் விழைகிறான். ''தை பிறந்தால் வழி பிறக்கும்'' என்று தீராத பிரச்சனைக்கு தீர்வுகாணத் தைப்பொங்கலை ஆவலுடன் எதிர்பார்க்கிறான் விவசாயி. ''வரம்புயர நீருயரும் நீருயர நெல் உயரும்'' என்றபடி வளம் பெருக வாழ்வு பெருகும். எனவே வளம் பெருக்கும் தைப்பொங்கலை வாழ்வு பெருக்கும் விழாவாகக் கொண்டாடுகிறான். ஆரம்ப காலத்தில் இன்று நத்தாராகக் கொண்டாடப்படும் கிறிஸ்மஸ் ஐரோப்பிய விவசாயிகளின் அறுவடைத் திருநாளாக இருந்தது என்றும் அதுவே பிற்காலத்தில் சமயச்சார்புடன் கிறிஸ்துநாதரின் பிறந்த நாளாகக் கொண்டாடப்படுவதெனச் சரித்திர ஆசிரியர் சிலர் கூறுவது உண்மையாயின் பொங்கல் திருநாள் ஒரு சர்வதேசத் திருநாளெனப் போற்றப்படக்கூடிய தொன்றாகும்.

பொங்குக பொங்கல்!


## வாய்வு சூரணம்

மலச்சிக்கல், மலக்கட்டு, உஷ்ண பித்த வாய்வுகள், கை கால் இடுப்பு மூட்டுகள் வலி பிடிப்பு-வயிற்று வலிக்குச் சிறந்தது.
(பத்தியமில்லை)

150 கிராம் டின் ரூபா. 4-00
(தேவைக்கு எழுதவும்)

## வீரகேசரி மாத்திரை

ஜீவசக்தி கனவிலும், சிறுநீரிலும் வெளியாவதை கட்டுப்படுத்தி நாடி நரம்புகளுக்கு வலுவும் உறுப்புக்கு உறுதியும் இழந்த சக்தியும் நீடித்த சக்தியும் அளிக்கும்
100 பில்ஸ் ரூ. 25; 50—ரூ. 13,
24—ரூ. 7. (மெழுகு ரூ. 4)
(பார்சல் சார்சு தனி)

**பண்டிட்: S. V. R. கண்டர் சன்ஸ் R. I. M. P.**
அரிசிப்பாளையம், சேலம் - 9. (S. I.)

கிடைக்குமிடங்கள்:-
(1) ஆத்மஜோதி நிலையம், நாவலப்பிட்டி, சிலோன் (2) அமிர்தலால் அன் கோ. (மெடிக்கல் ஸ்ரோர்ஸ்) 146, நைனியப்ப நாயக்கன் தெரு, சென்னை- 3. (3) ராஜா மெடிக்கல், 31, தர்மராஜா கோவில் தெரு, பெங்களூர் கண்ட். (4) வல்லராம் 188 A, தாராவிரோடு, பம்பாய்-17




# நெஞ்சோடு நெஞ்சம்

ஏ. எஸ். இப்றாகிம், 'கலைமேகம்' மூதூர்–6.

தூசி படிந்திட்ட நெஞ்சே — உன்னில்
தூய்மை படிந்திட வேண்டும்
மாசை அகற்றிய பின்பு — உயர்
மாண்பை அடைகுவாய் திண்ணம்!

காசு கிடைத்திட்ட போதும் — நீ
கண்ணியம் மறந்திடல் தீது
வீசு புகழுன்னைச் சாடும் — ஐயோ
வீணே பழியுன்னை நாடும்!

பேசும்படி மண்ணில் வாழு — நீ
பெருமைபெற் றிலங்குவாய் நாளும்
நேசம் பழிக்காமல் பாடு — உன்
நேர்மை தவறினால் கேடு!

மோசம் பிறர் செய்தபோதும் — நீ
முன்னின்று அன்பினை ஓது
தோசம் எனக்கொள் பொறுமை — நீ
தோல்வியைக் காணாயே தேறு!

* *

# சமத்துவ வேந்தன்

'அன்புக் கவி' — பொத்துவில்

சந்தணக் கட்டை தன்னை
சரிசம ஞக வெட்டித்
தந்தது போன்ற சின்னத்
தறிகளைக் குறளாய் மாற்றி
எந்தையின் மூத்தோன் எங்கள்
இலட்சியத் தந்தை வாழ்வின்
விந்தைகள் புரிந்து சொன்ஞன்
வித்தகன் 'செந்நாப் போதான்'

அறம்பொரு ளின்பம் வீடு
அனைத்தையும் குறளாய்த் தந்தான்
திறம்பல ஊறு தற்காய்
திட்டங்கள் தீட்டித் தந்தான்
மறத்தினைக் கொன்ருெ ழித்தான்
மாமேதை யாஞன் அன்புக்
குறளினுல் வாழ்வையீந் தான்
குவலயம் போற்றும் ஆசான்.

சர்க்கரை சாருய்த் தந்தான்
சக்திகள் எமக்கு ஈந்தான்
திக்கெல்லாம் சுடர்ப ரப்பும்
திறமைசேர் குறளி ஞசான்
பக்தியைப் பாசம் தன்னைப்
பாரிலே மிளிரச் செய்தான்
சக்தியைக் கூட்டு வித்தான்
சமத்துவ வேந்தன் ஆஞன்.

மந்திர மாக நின்று
மாநிலம் புரக்க இன்று
தந்திர மனைத்தும் வென்று
தாழ்மைகள் அனைத்தும் கொன்று
விந்தைசேர் வழியில் வென்று
விரவிடும் குறளால் நன்று
கந்தனின் கருணை வென்ருேன்
காட்டிஞன் புதிய பாதை!

# பட்டம்

— சி. தெய்வேந்திரம்பிள்ளை, வித்தி. கல்லூரி, முள்ளியவளை. —

பட்டம் நல்ல பட்டம்
பறக்கும் அந்தப் பட்டம்
எட்ட நின்று விடவே
ஏறிப் பாயும் பட்டம்.

காற்றில் ஓடும் பட்டம்
கயிற்றி லாடும் பட்டம்
ஏற்றி வைத்துப் பார்த்தால்
இன்பங் காட்டும் பட்டம்.

வண்ண வண்ணச் சிறகும்
வடிவு கொண்ட வாலும்
எண்ணத்துக் கோர் விருந்
[தாய்
ஏறி ஆடும் பட்டம்.

# பூந்தோட்டம்

தெய்வநாயகி பொன்னுத்துரை — புதுக்குடியிருப்பு

பூந் தோட்டமாம் பூந்தோட்டமாம்
பூக்கள் மலரும் பூந்தோட்டம்
மனத்தைக் கவரும் மஞ்சள்பூ
மணத்தைக் கொடுக்கும் மல்லிகைப்பூ
பூசைக் குகந்த பூக்கள்பல
பூவையர் சூடும் செவ்வந்திப்பூ
தூயவன் சூடும் செவ்வரத்தம்பூ
மாயவன் சூடும் துளசிப்பூ
அமரர்க்கு உதவும் அலரிப்பூ
ஆசைக் குகந்தது ஆம்பல்பூ
கண்ணைக் கவரும் கானேசன்பூ
கைக் குகந்தது கார்த்திகைப்பூ
முடிக் குரியது முல்லைப்பூ
முடிமன்னரும் விரும்புவது றோஜாப்பூ.

-✶—✶-

# அந்த நாள் என்று வருமோ?

— சிவம் —

களவுபொய் கொலைகள் சூது
கனவென மறைந்து போக
அளவுடன் பொருளைப் பெற்று
அனைவரும் ஒன்று சேர்ந்து
வளமுடன் எங்கள் நாட்டை
விரைவினில் ஆக்கிவைத்து
இளமைபோல் என்றும் வாழும்
அந்தநாள் வருவ தென்றோ?

சாதிகள் சமய மென்ற
சங்கடப் பிரிவு நீங்க
ஆதிநாள் குற்றம் தன்னை
அன்றுடன் விட்டோ மென்று
மேதினி முற்று முள்ள
ஏழைசெல் வந்தர் யாரும்
தீதிலா தொன்றாய்க் கூடித்
திகழ்ந்திடும் நாளும் என்றோ?

எளிமையாய் வாழ்ந் திருந்து
ஏழமை தவிர்த்து வைத்து
பழியினுக் கஞ்சி யிந்தப்
பாரினிற் பாவ மின்றிப்
பொழுதினை இன்ப மாகப்
போற்றிடும் வகையில் போக்கி
களிப்புடன் வாழு கின்ற
அந்தநாள் காண்ப தெப்போ?

* *
* *
* *

# கணக்கியலுக்கோர் அறிமுகம் (21)

—: வை. சி. சிவஞானம் :—

## ஐந் தொகை:-

ஒரு குறிப்பிட்ட திகதியன்றுள்ள நிதி நிலையைத் தெளிவாகவும், விளக்கமாகவும் காட்டும் பொருட்டுச் செய்யப்படுங் கூற்றே ஐந்தொகையாகும். ஐந்தொகையின் வலப்பக்கத்தில் சொத்துக்களையும், இடப் பக்கத்தில் கடன்களையும் பதிதல்வேண்டும். சொத்துக்களையும் கடன்களையும் ஒவ்வோரினங்களாகப் பிரித்துப் பதிதல் வேண்டும்.

சொத்துக்களை நிலையான சொத்துக்கள், கற்பனைச் சொத்துக்கள், நடைமுறைச் சொத்துக்கள் (மிதக்கும் சொத்துக்கள், சுழலும் சொத்துக்கள், எளிதிற் காசாகும் சொத்துக்கள்) எனவும் கடன்களை மூலதனம், ஒதுக்கங்கள், நீண்ட காலக் கடன்கள், குறுங்காலக் கடன்களெனவும் பிரித்துப் பதியலாம்.

''நிலையான சொத்துக்கள்'' நிலம், கட்டிடம், இயந்திரம், தளபாடம், முதலீடு போன்றவை.

''கற்பனைச் சொத்துக்கள்'' நன் மதிப்பு, ஆரம்பச் செலவு, தேறிய நட்டம் போன்றவை.

''நடைமுறைச் சொத்துக்கள்'' காசு, வங்கி மீதி, கடன்பட்டோர் சரக்கு மீதி, வருமதி உண்டியல்கள் போன்றவை.

''நீண்ட காலக் கடன்கள்'' ஈட்டுக் கடன், தொகுதிக் கடன் போன்றவை.

''குறுங்காலக் கடன்கள்'' வியாபாரக் கடன்கள், செல்மதி உண்டியல், வருமான முற்பணங்கள் போன்றவை.

''ஒதுக்கங்கள்'' பொது ஒதுக்கம், பெறுமானத் தேய்வொதுக்கம், அறவிடமுடியாக் கடனொதுக்கம், கழிவொதுக்கம் போன்றவை.

''மூலதனம்'' ஆரம்ப மூலதனத்துடன் மூலதனவட்டி, தேறிய இலாபம் என்பவற்றைக் கூட்டி அத் தொகையிலிருந்து தேறிய நட்டம், சொந்தச் செலவு என்பவற்றைக் கழித்து வருந் தொகையாகும்.

## ஐந்தொகை தயாரிக்கும் முறைகள்:-

1. **நிலையான சொத்துக்களை முன்வைத்துத் தயாரித்தல்:**

நிலம், கட்டிடம் என்பவற்றை முதலில் எழுதிப் பின் முறைப்படி எளிதிற் காசாக்க முடியாத சொத்துக்களை எழுதி இறுதியில் வங்கி மீதி, காசு மீதி என்பவற்றை எழுதுதல்வேண்டும்.

கடன்பாகத்தை மூலதனம், ஒதுக்கம், நீண்ட காலக் கடன், குறுங்காலக் கடன் என்ற வரிசையில் எழுதுதல்வேண்டும்.

2 நடைமுறைச் சொத்துக்களை முன்வைத்துத் தயாரித்தல்:-

காசு மீதி, வங்கி மீதி என்பவற்றை முதலில் எழுதிப் பின் எளிதிற் காசாக்கக்கூடிய சொத்துக்களை வரிசைப்படி எழுதுதல் வேண்டும். இறுதியில் நிலம் கட்டிடம் எழுதப்படல் வேண்டும். கடன்பாகத்தைக் குறுங்காலக் கடன், நீண்ட காலக் கடன், ஒதுக்கம், மூலதனம் என்ற வரிசைப்படி எழுதுதல்வேண்டும்.

3. கழித்துக் காட்டும் ஐந்தொகை:-

நடைமுறைச் சொத்துக்களில் இருந்து குறுங்காலக் கடன்களைக் கழித்துவரும் மீதியுடன் நிலையான சொத்துக்களைக் கூட்டுதல் வேண்டும். அத்தொகையில் இருந்து நீண்ட காலக் கடன்களைக் கழித்தல் வேண்டும். இத்தொகையை இரு கோடுகளிட்டு முடித்துக் காட்டிவிட்டு அதன் கீழ்ப்புறம் மூலதனம், ஒதுக்கம், இலாப மீதி என்பவற்றைப் பதிந்து கூட்டிக் காட்டுதலாகும்.

முடிவுக் கணக்குகளைத் தயாரித்தல்:-

கணக்கேடுகளிலுள்ள கணக்கு மீதிகளைக் கொண்டும் உரிமையாளர்கள் தரும தகவல்களைக் கொண்டும் முடிவுக் கணக்குகள் தயாரிக்கப்படுகின்றன. கணக்கேடுகளில் இரட்டைப் பதிவு முறையில் நடவடிக்கைகள் பதியப்பட்டுள்ளன என்பதை அறிவதற்காகக் கணக்கு மீதிகளைக்கொண்டு பரீட்சை மீதி தயாரிக்கப்படுகிறது. பரீட்சை மீதியில் பற்று நிரலிலுள்ள கணக்கு மீதிகள் செய்கைக் கணக்கு, வியாபாரக் கணக்கு, இலாப - நட்டக் கணக்கு என்பவற்றில் பற்றுப் பாகத்திலும், ஐந்தொகையின் சொத்துப் பாகத்திலும் பதியப்படும். அல்லது இவற்றின் எதிர்ப்பாகத்திலுள்ள தொகைகளிலிருந்து கழித்துக் காட்டப்படும். பரீட்சை மீதியின் வரவு நிரலிலுள்ள தொகைகள் செய்கைக் கணக்கு, வியாபாரக் கணக்கு, இலாப - நட்டக் கணக்கு என்பவற்றில் வரவுப் பாகத்திலும், ஐந்தொகையிற் கடன் பாகத்திலும் பதிதல்வேண்டும். அல்லது எதிர்ப்பாகத்திலுள்ள தொகைகளிலிருந்து கழித்துக் காட்டப்படுதல்வேண்டும்.

| | | |
|---|---|---|
| 31-1-69 | சரக்கிருப்பின் கொள்விலை | 5000 |
| ,, | சந்தைவிலை | 4873 |


எனக் கொண்டு சென்ற இதழின் பரீட்சை மீதியைக் கொண்டு முடிவுக் கணக்குகளைத் தயாரிப்போம்.

# சிவாநந்தனின் 1-2-68 தொடக்கம் 31-1-69-ம் தேதி வரையுள்ள வியாபார இலாப - நட்டக் கணக்கு

| பற்று விபரம் | | ரூபா | வரவு விபரம் | | ரூபா |
|---|---|---|---|---|---|
| இருப்பு | | 3750 | விற்பனை | 14650 | |
| கொள்முதல் | 8500 | | கழி: உட்திரும்பல் | 550 | |
| கூட்டு: செலவு | 150 | | தேறிய விற்பனை | | 14100 |
| கூலி | 23 | | | | |
| | 8673 | | | | |
| கழி: வெளித்திரும்பிய சரக்கு | 550 | 8123 | | | |
| விற். இருக். சரக்கின் பெறுமதி | | 11873 | | | |
| கழி: 31-1-69 சரக்கு மீதி | | 4873 | | | |
| விற்ற சரக்கின் பெறுமதி | | 7000 | | | |
| மொத்த இலாம் கூ. கொ. செ. | | 7100 | | | |
| | | 14100 | | | 14100 |
| கொடுத்த கழிவு | | 275 | மொத்த இலாபம் கீ/கு | | 7100 |
| விற்பனைச் செலவு | | 100 | பெற்ற கழிவு | | 275 |
| வாடகை | | 150 | வெற்றுப்பொருள் விற்பனை | | 150 |
| சம்பளம் | | 300 | பெற்ற தரகு | | 300 |
| கொடுத்த வட்டி | | 20 | சில்லறை வருமானம் | | 400 |
| அறவிடமுடியாக் கடன் | | 1400 | பெற்ற வட்டி | | 25 |
| பெறுமானக் குறைவு | | 50 | | | |
| தளபாட நட்டம் | | 80 | | | |
| தபாற் செலவு | | 15 | | | |
| பிரயாணச் செலவு | | 15 | | | |
| சில்லறைச் செலவு | | 22 | | | |
| தேறிய இலாபம்-மூலதனம் கொள்முதல் செய்தது | | 5823 | | | |
| | | 8250 | | | 8250 |

## சிவாநந்தனின் 31-1-69-ம் தேதியன்றுள்ள ஐந்தொகை

| கடன்கள் | | ரூபா | சொத்துக்கள் | | ரூபா |
|---|---|---|---|---|---|
| மூலதனம் | 29250 | | நிலையான சொத்துக்கள் | | |
| கூட்டு: தேறிய இலாபம் | 5883 | 35073 | நிலம் கட்டிடம் | 15000 | |
| ஈட்டுக் கடன் | | 5000 | தளபாடம் | 1550 | |
| குறுங்காலக் கடன்கள் | | | முதலீடு | 5000 | |
| | | | | | 21550 |
| கடன் கொடுத்தோர் | 3700 | | நடைமுறைச் சொத்துக்கள் | | |
| சென்மதி உண்டியல் | 2000 | | சரக்கு மீதி | 4873 | |
| வங்கிக் கடன் | 920 | 6620 | வருமதி உண்டியல் | 2500 | |
| | | | கடன்பட்டோர் | 2505 | |
| | | | சில்லறைக் காசேட்டுமீதி | 100 | |
| | | | காசு மீதி | 15165 | |
| | | | | | 25143 |
| | | 46693 | | | 46693 |




# அகிலத்திற்கோர் அருட்கொடை அண்ணல் மா நபி

— செல்வி மும்தாஜ் அப்பாஸ், கிருங்கதெனிய, மாவனெல்லை. —

மாநிலத்தில் மங்காத ஒளிவிளக்காக, மாந்தருள் மாணிக்கமாக, அன்னை ஆமினுவின் அருந்தவப் புதல்வராக அவதரித்தார் அண்ணல் மா நபி. அன்னாரின் ஜனன தினம் என்றபொழுதே அகிலம் இன்ப வெள்ளத்தில் மூழ்கித் திளைக்கின்றது. ஆம்! பெண்மைக்குப் பெருமை தந்த பெருமானுர் அவர்கள் அஞ்ஞான இருள் சூழ்ந்த அந்த அரேபிய நாட்டிலே அருள் ஜோதியாக கி. பி. 570 அரபு மாதப்படி ரபீவுல் அவ்வல் 12ஆம் நாள் அமலன் அன்பு அன்னை ஆமினு மூலம் அகிலத்திற்கு அருட்கொடையாக அருளினுன். உலக உத்தமர் உதித்துவிட்டாரென்றதும் பூமாதேவி பூரித்தாள். மனிதர்களின் அறிவுக் கண்கள் திறந்தன. அறியாமை அகன்றது.

இளமைப் பருவத்திலே இம்மை மறுமை ஈருலகிற்கும் ஏற்றவாறு நடந்தார்கள். பால்யப் பருவத்திலே பாபச் செயல்களைவிட்டு விலகிப் பண்பாளராகத் திகழ்ந்தார்கள். பொய், களவு, கொலை, கொள்ளை இவைகளைத் தம் உயர் செயலாகக்கொண்டு வாலிபர்கள் வாழ்ந்த நாட்டிலே, இக் குணதிலகம் கெட்டசெயல் துர்நடத்தைகளை விட்டும் புறம்பாக மாசின்றி நடந்து அன்பாலும், பண்பாலும் அனைவர் உள்ளத்திலும் அழியா இடம் பெற்ருர்கள். மாதர் சமுகத்திற்கே மதிப்பளிக்காமற் பெண்ணினத்தை நசுக்கி, ஒதுக்கிய காலத்திற் பெண்களே உலகத்தின் கண்களெனக் கற்பின் பெருமையை உணர்த்தினுர்கள் இந்த வள்ளல் நபி. பூமான் நபி அவர்கள் தமது இருபத்தைந்தாவது வயதில் நாற்பது வயதையுடைய விதவை கதீஜா என்னும் புண்ணிய

வதியை மணந்தார்கள். இது அன்னவரின் சிற்றின்ப வாழ்க்கைக்காகவா? இல்லவேயில்லை. வையகத்தினருக்கு பெண்மையின் மகத்துவத்தை உணர்த்தவே. இது மாதிரி பத்து அனாதைப் பெண்களுக்குச் சுகவாழ்வளித்தார்கள். உலக உத்தமர் உயர் தந்தையாக விளங்கினார்கள். மதார் குல மாணிக்கமாக விளங்கும் அன்னை பாத்திமா அண்ணல் அவர்களின் அன்புப் புதல்வியே.

கோமான் நபியவர்களின் வாழ்க்கையை நோக்கு மிடத்து அவர்கள் தம் குறுகிய கால வாழ்விலே இடையனாக, நேர்மையான வியாபாரியாக, அன்புக் கணவராக, சிறந்த தந்தையாக, புனித தீர்க்கதரிசியாக, அன்பால் அனை வரையும் பரிபாலிக்கும் பரிபாலகராக, உன்னத வைத்திய ராக, உண்மைச் சட்டம் வகுப்போராக, மாவீர சேனாதி பதியாக, செங்கோல் மன்னராக வாழ்ந்து காட்டினாரென்றால் தரணியில் இதைவிட ஒரு வாழ்க்கை எந்த மனிதருக்கு அமையும். வள்ளல் தமக்காக இவ்வாறு வாழவில்லை. வாழ்வோருக்கு வழிகாட்டியாக வாழ்ந்தார்கள். இவரைவிட ஒரு சேவகரை அவனியிலே காண்பதரிது.

கருணை நபியவர்கள் ஏகதெய்வக் கொள்கையை உலகிற்கு உணரவைக்கத் தன்னையே தியாகம் செய்தார். தாழ்த்தப்பட்ட மக்களின் உயர்ச்சிக்காகக் கடுமையாக உழைத்தார்கள். நபிமஹான் பட்டாடை உடுத்து, முத்தாரம் போட்டு வாழவில்லை. பரம ஏழையாக ஏழ்மையையே பெருமையெனக் கொண்டவர்கள். ஆனால் அடிமைகளின் நல்வாழ்விற்கு அன்புப் போர்வையாக அமைந்தார்கள். அண்ணலவர் அனைவரின் மனநிலை அறிந்து நடக்கக் கூடிய அநுபவ சமுத்திரம். யாவருடனும் பணிவாகவும், மரியாதையாகவும் நடந்து மற்றவர்களையும் அதன்பால் நடக்கச்செய்த மனிதத் தன்மையின் நிறைவு. தன் பொன், பொருள் யாவையும் இறைநெறியில் அள்ளியிறைத்துப் பிச்சைக்காரரில்லாத பிச்சைக்காரராக வாழ்ந்தார். ரசூலேகரீம் அவர்கள் பழமையின் பிரதிநிதியாக இருக்கலாம்; ஆனால் புதுமையின் சங்கநாதம் ஏழைகளின் குறைகள், துன்பங்கள் தனக்குமுரியன என்று தாங்கிய சுமை தாங்கி. வையகத்தில் வாழ்வாங்கு வாழ வழிவகுத்த

கலங்கரை விளக்கம். ''மக்களுள் உயர்வு - தாழ்வில்லை. ஆண்டார் அடிமையில்லை. இறைவன் படைப்பில் யாவரும் சமம். வகுப்பு வேற்றுமையின்றி வாழ வேண்டும். ஏக தெய்வனை வழிபடவேண்டும்'' இவைதான் அண்ணல் திலகத்தின் அரும்போதனை.

மாக்களாகவிருந்த மக்களைத் திருத்த முனைந்த நமது நாயகம் முகம்மது நபி (ஸல்) அவர்களை அறியாமையில் மூழ்கியிருந்த மக்கள் சொல்லொணுத் துன்பத்திற்கு ஆளாக்கினுர்கள். அவர்களுக்குச் செய்யாத கொடுமையுமுண்டோ? ஆனுல், அமலனின் அருந் தூதர் கலங்கவோ, பிற முதுகு காட்டி ஓடவோ, தம் கடமையைச் செய்யாமலிருக்கவோ, மக்களைத் தூசிக்கவோ, தீமைக்குத் தீமை செய்யவோ இல்லை. பொறுமை பென்றும் ஆயுதத்தாலே அத்தனை கொடுமைகளையும் தடுத்தார்கள். தீன் கொடியைப் பார் எங்கும் பறக்கவிட்டு வெற்றியுமீட்டினுர்கள். ரசூல் (ஸல்) அவர்கள் எடுத்துரைத்த ஏக தெய்வக் கொள்கை எண் திசையிலும் முழங்குகின்றது. சிறந்த சேவையைச் செவ்வனே முடித்த செம்மல் நபி அவர்கள் ஈற்றில் தமது அறுபத்திமூன்றும் வயதில் ஹிஜ்ரத் 11ஆம் ஆண்டு ரபியூல் அவ்வல் 12ஆம் நாள் அன்னை ஆயிஷா அவர்களின் இல்லத்தில் வைத்து அன்பு மனைவியின் மடியில் தலை வைத்தவர்களாய்த் தேகவியோகமானுர்கள். அங்கேயே நல்லடக்கமும் செய்யப்பட்டார்கள்.

*—
—*

உருவகக் கதை

# ஞானேதயம்

— எம். ஐ. எஸ். தாவூத் —

அழகாகக் காட்சியளித்த அந்த ஆற்றின் கரையிலே பல மீனவர்கள் வலை வீசி மீன் பிடித்துக்கொண்டிருந்தனர். நெடுநேரமாக ஒரு மீனவனையே பார்த்து வாலை ஆட்டிக் கொண்டிருந்தது அந்தச் சொறி நாய்.

எவ்வளவு சூழ்ச்சியாக இவ்வளவு மீன்களையும் பிடித்து விட்டானே! எனக்கும் இப்படி ஒரு வழியில்லையே என எண்ணி அங்கலாய்த்துக் கொண்டது. ஏறக்குறை இரண்டு

மணி நேரமாகக் காத்துக்கொண்டு நிற்கிறேனே, ஒரு மீனைத் தரமாட்டானா? என்ற நப்பாசை! மீனவன் தனது கடமையைச் சரிவரச் செய்துகொண்டிருந்தான். மீன் கூடை நிரம்பி வழிந்துகொண்டிருந்தது.

நாய்க்கு நாவில் ஜலம் ஊறி வழிந்துகொண்டிருந்தது அதன் பொறுமையைச் சோதிப்பதுபோலக் கூடையிலிருந்த மீன்கள் துள்ளித் துள்ளிப் பாய்ந்து கொண்டிருந்தன. நாயின் பொறுமை எல்லையை மீறிவிட்டது. இனிமேல் இந்தக் கஞ்சப்பயல் எனக்கு எங்கே மீன் போடப் போகிறான்? என்று மனதுக்குள்ளே உறுமிக்கொண்டு வேறொரு மீனவனை நோக்கி நடையைக்கட்டிய அவ்வேளையில்...

''ஞ்சூ!...ஞ்சூ!!''

மீனவனின் குரலைக் கேட்டதும் நாய்க்கு ஒரு நம்பிக்கை! திரும்பியது மீனவனை நோக்கி. அதன் நம்பிக்கை வீண் போகவில்லை. அந்த மீனவன் ஒரு மீனை வீசியெறிந்தான் நாயை நோக்கி! நாய் ஆவலுடன் மீனை எடுக்க ஓடிவந்த அவ்வேளையில்! திடீரெனக் குறுக்கே பாய்ந்து அந்த மீனைக் கவ்விக்கொண்டோடியது வேறொரு நாய்! ஏமாற்றத்துடன் திரும்பிய நாய் ''மனிதனுக்குள்ளே மட்டும் தந்திரமாகப் பிழைப்பவர்களில்லை; நமது இனத்திலும் உண்டு!'' என்று எண்ணியது,

- ✷ -

## சிரிப்பே சிறப்பு !

தெய்வநாயகி பொன்னுத்துரை

சிவப்புமலை என்ற சிற்றூரில் சிவந்தி என்றொரு ஊமையும், சிவா என்றொரு குருடனும் வசித்து வந்தார்கள். அவர்கள் அவ்வூரிலுள்ள ஒரு குருடர் - செவிடர் பாடசாலையிற் படித்துவந்தார்கள். சிவந்தியும், சிவாவும் இணைபிரியாத சிநேகிதர்கள். ஒரு நாள் பாடசாலையில் ஊமைப் பையனான சிவந்திக்குப் பசித்துவிட்டது. குருட்டுப் பையனான சிவாவிற்கு ஏதோ வெட்டக் கத்திரிக்கோல் தேவைப்பட்டது.

மேற்படி கதையை எனது சகோதரன் தேவன் கூறி இனி தான் கேட்கும் கேள்விக்குப் பதில் கூறும்படி சொன்ஞன். நானும் சரி என்றேன். உடனே ''ஊமை எப்படிச் சோறு கேட்பான்? குருடன் எப்படிக் கத்திரிக்கோல் கேட்பான்?'' என்று கேட்டான். நான் சிந்தியாது உடனே ''ஊமை பசித்தால் தனது வயிற்றைத் தடவி வாயைத் தொடுவான்'' என்றும் ''குருடன் நாங்கள் கத்திரிக்கோலே வெட்டும் மர்திரியைக் கையாற் காட்டுவான்'' என்றும் சொல்லி இரண்டையும் கையாற் செய்து காட்டினேன். உடனே எனது பக்கத்திருந்த சகோதரர்கள் அனைவரும் 'கொல்' என்று சிரித்தனர். உடனே எனது சகோதரன் ''பதில் பிழை'' என்ருன். மேலும் சிரிப்புக் கூடியது.

பின் ''ஊமை வயிற்றைக் கையாற் தடவி வாயைத் தொட்டுத்தான் சாப்பாடு கேட்பான்'' என்றும், ''ஆனல் குருடன் கதைப்பான்தானே; அவன் வாயாற் கத்திரிக் கோலைக் கேட்பான்'' என்றும் எனது சகோதரன் தேவன் பதில் சொன்னுன். நான் வெட்கித் தலை குனிந்தேன்.

சிறுர்களே! நீங்களும் சிந்தியாது பதில் சொல்லிச் சிரிப்பைப் பரிசாகப் பெருதீர்கள். உங்களிற் சிறியவர் எந்தச் சிறு கேள்வியைக் கேட்டாலும் சிந்தித்து விடை பகருங்கள்.

— சிந்தித்துச் செயல்படு —

# இள நீரில்.....

| | | | |
|---|---|---|---|
| சோடியம் | 15 | மில்லிக் | கிராம் |
| பொட்டாசியம் | 312 | ,, | ,, |
| கல்சியம் | 29 | ,, | ,, |
| அயச்சத்து | 0·1 | ,, | ,, |
| தாமிரம் | 0·4 | ,, | ,, |
| பாஸ்வரம் | 37 | ,, | ,, |
| கந்தகம் | 24 | ,, | ,, |
| குளோரின் | 183 | ,, | ,, |

ஆதாரம்: ஞான்ஒலிஜ்ஞான் (வங்காளி)




‘‘கலைமேகம்’’ இப்ருகிம்,
மூதூர் — 6.

அன்புடை ஆசிரிய!

இதழுக்கு இதழ் புதுமையும், பொலிவும் பெற்றுச் சிறந்த அம்சங்களோடு ‘வெற்றிமணி’ ஏடு காண மகிழ்ச்சியும் பெருமையும் அடைகின்றேன்.

கவிதைக்கு ‘வெற்றிமணி’ அளித்துவரும் அரங்கம் உண்மையில் வரவேற்கக் கூடிய ஒன்று. ஈழத்திற் பத்திரிகை நடாத்துவது எளிதான காரியமல்ல என்பதை யாவரும் அறிவர். என்றாலும் வெற்றிமணியின் அயராத முயற்சி இறுதிவரை வெற்றி ஈட்டத் தவறாது. வெல்க அதன் தொண்டு. வெற்றி ஏடாகத் திகழட்டும்!

ம. சி. சிதம்பரப்பிள்ளை,
கல்வி மந்திரி காரியாலயம்,
கொழும்பு.

வெற்றிமணி வளர்ந்து இன்னும் பல பக்கங்களுடனும் இலங்கையிலுள்ள எழுத்தாளர்களுடைய கட்டுரைகளுடனும் பரவிப்படரவேண்டும் என இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

உங்கள் அறிவுரைகளும் இரசிகமணியின் அறுசுவையும் மற்றும் அன்பர்களுடைய ஓவியங்களும் தெவிட்டாத தேனாக இருக்கின்றன. இலங்கையில் தோன்றி மறையும் பத்திரிகை போன்றில்லாது உண்மையாக வெற்றிக் கொடி நாட்டும் வெற்றிமணியை தமிழ் முருகன் - வெற்றி வேற் கந்தன் — காத்தருள்வானாக!

# பேனா நண்பர் சங்கம்

26. ஐ. குமாரவேல்,
பலசரக்குக் கடை,
ஓமந்தை.

வயது 19 இவருக்குத் தெரிந்த பாஷைகள் தமிழும், சிங்களமும். சித்திரம் வரைதல், விஞ்ஞானச் செய்திகள் வாசித்தல், கதைப் புத்தகம் படித்தல் முதலியவற்றாற் பொழுது போக்கும் இவருடன் ஆண் - பெண் இருபாலாரும் தொடர்பு கொள்ளலாம்.

## உங்களுக்குத் தெரியுமா?

மகாலிங்கம் இளங்கோவன், நெல்லியடி, கரவெட்டி.

1. மக்களின் நலனுக்காக, கோமின்ராங் கட்சியை அமைத்தவரும் சீனத் தலைவரும் யார்?
2. சீனுவில் அபின் யுத்தம் எப்போது நடைபெற்றது?
3. இந்திய சிப்பாய்க் கலகம் எப்போது நடைபெற்றது?
4. 1912இல் படித்த இலங்கையரனைவருக்கும் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர் யார்?
5. கோல்புறூக் கமிஷன் சீர்திருத்தம் எந்த ஆண்டில் நிகழ்ந்தது?

விடைகள்: 1. சன்-யாற்-சென் 2. 1840இல் 3. 1857இல்
4. சேர். பொன். இராமநாதன் 5. 1832இல்

## நவீன பாலர் பள்ளித் திறப்பு விழா வைபவம்

உணுப்பிட்டி வாழ் சின்னஞ் சிறு பாலர்களின் நலன் கருதி ஓர் நல்ல பாலர் பள்ளி ஒன்று சென்ற மாசித் திங்கள் 5ஆம் நாள் (16-2-1970) திங்கட்கிழமை காலை 9-45 மணிக்கு, சைவத்திரு. க. பத்மநாதன் (தலைமையாசிரியர், அரசாங்க தமிழ்க் கலவன் பாடசாலை, உணுப்பிட்டி.) அவர்களால் விகாரமாவத்தை, டறுப்பிட்டி வீதி, உணுப்பிட்டி 251/1ஆம் இலக்க இல்லத்தில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

உணுப்பிட்டி இந்து சன்மார்க்க சபையின் உப தலைவரும் சமயப் பெரியாருமாகிய சைவத் திரு. க. இராசலிங்கம் அவர்கள் ஷ்டி பாலர் பள்ளியின் அவசியத்தினைப் பற்றியும், வளர்ந்து வரும் சமூகத்திற் பாலர்களின் பங்கினையும் எடுத்து விளக்கினுர். இந்த நற்பணிக்கு எல்லோருடைய ஒத்துழைப்பையும், ஒற்றுமையையும் வேண்டிக் கொண்டார். உணுப்பிட்டி வாழ் மக்கள் தங்கள் குழந்தைகளை அவசியம் இந்த நவீன பாலர் பள்ளியில் வந்து சேருமாறும் கேட்டுக்கொண்டார்.

சிற்றுண்டி வழங்கலுடன் திறப்பு விழா இனிது நிறைவேறிற்று.

# இளைஞர்களுக்கு இலக்கியம் அவசியம்

வேண்டாத போக்குகளிலும் கிளர்ச்சிகளிலும் ஈடுபட்டிருக்கும் இளைஞர்களை நன்னெறிப்படுத்துவதற்கு இலக்கியம் ஓர் அரிய சாதனையாகும். மனத்துக்குத் தென்பூட்டி, வருங்காலத்துக்கு வழி சொல்லி, மனதைத் தூய்மைப்படுத்தி வாழ்வளிக்கவல்லது இலக்கியம். இளைஞர்களை இலக்கிய நூல்களையும், இலக்கியப் பத்திரிகைகளையும் அவர்களது பொழுதுபோக்கு நேரத்திலாவது படிக்கத் தூண்டுவது பெரியோர்களின் கடனாகும்.

இவ்வாறு யாழ் இலக்கிய வட்டத் தலைவர் கவிஞர் வி. கந்தவனம் இலக்கிய வட்டத்தின் ஆண்டு விழாவுக்குத் தலைமை வகித்துப் பேசுகையிற் குறிப்பிட்டார்.

யாழ் இலக்கிய வட்டத்தின் நான்காவது ஆண்டுவிழா யாழ்ப்பாணம் திறந்த வெளியரங்கில் 14-3-70 சனிக்கிழமை சிறப்பாகக் கொண்டாடப்பெற்றது. விழா நாதஸ்வரக் கலாமணி - இசைவெள்ளம் பஞ்சாபிகேசன் குழுவினருடைய மங்கள இசையுடன் ஆரம்பமாகியது. அதனைத் தொடர்ந்து, கவிஞர் வே. ஐயாத்துரையின் தமிழ் வாழ்த்துடன் நிகழ்ச்சிகள் தொடங்கின. கவிஞர் இ. நாகராஜன் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். செந்தமிழ்மணி பொன். கிருஷ்ணபிள்ளையின் மேன்மைகளை மிகச் சிறப்பாக இரசிகமணி கனக. செந்திநாதன் எடுத்துக் கூறினார். கவிஞர் வே. ஐயாத்துரை செந்தமிழ்மணிக்குப் பாராட்டுப் பாமாலையைப் படித்தளித்தார். இரசிகமணி குத்துவிள்க்கைச் செந்தமிழ்மணிக்கு வழங்கினார்.

அடுத்து, கவிஞர் வி. கந்தவனம் அவர்களின் 'கீரிமலையினிலே' என்ற காவிய நூலின் வெளியீடு யாழ் இலக்கிய வட்டத்தின் துணைத் தலைவர் செங்கைஆழியான் அவர்கள் தலைமையில் இடம் பெற்றது. கவிஞர் காரை. செ. சுந்தரம்பிள்ளை, திரு. ஏ. ரி. பொன்னுத்துரை, திரு. சொக்கன் ஆகியோர் நூல்பற்றிப் பேசினர். சங்கீத பூசணம் அல்வின் தேவசகாயம் அவர்கள் 'கீரிமலையினிலே'க் கவிதையை இசையுடன் பாடிக் காட்டினார்கள்.

முடிவில் திரு. ஏ. ரி. பொன்னுத்துரையும், நடிகமணி வைரமுத்துவும் சேர்ந்து நடித்த 'தமிழுக்காகத் தலை' என்ற நாடகமும், திரு. ஏ. ரி. பி. குழுவினரின் 'நாடகம்' என்ற ஓரங்க நாடகமும் இடம்பெற்றன.

## மாணவர் மன்ற அங்கத்தவர்கள்

78. பெ. ஐயாத்துரை, கபரகலை, இளமுல்லை. [போடை
79. ப. புவனேந்திரன், சிவானந்த வித்தியாலயம், கல்லடி, உப்
80. க. ஜெயந்தாதேவி, 'முருகன் குடில்', பிளக்பூல், நுவரெலியா.
81. S. K. நடராஜி, வின்டி கோணர், பிளக்பூல், நுவரெலியா.
82. T. ஜெயசிங்கம், புனித அந்தோனியார் அ. த. க. பாடசாலை, நுவரெலியா.

● சுத்தம் சுகம் தரும்!

★ 'மில்க் வைற்' வெண்மை தரும்!!

○ கந்தையானாலும் கசக்கிக் கட்டுங்கள்! ○

துரித சலவைக்கு

மில்க்வைற் சலவைப்பவுடரை வாங்கிப் பாவியுங்கள்!

மில்க்வைற் சோப் மேலுறைகளை

அனுப்பிப் பரிசுகளைப் பெறுங்கள்!

மில்க்வைற் சோப் தொழிற்சாலை,

யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 7233

எந்நேரமும் நடைபெற முடியாத
எல்லோர்க்குங் கிட்டிவிட முடியாத
ஒரு சம்பவம்
கீரிமலையினிலே நடந்தது

படித்துச் சுவையுங்கள்
கவிஞர் வி. கந்தவனத்தின்
"கீரிமலையினிலே"

தனலக்குமி புத்தகசாலை,
சுண்ணாகம்.

விலை ரூபா 2-00

இலங்கையிற் செய்திப்பத்திரிகையாகப் பதியப்பட்டது. QB 3033

# அறிவித்தல்

## சக்தி அச்சகம்

## 1-4-70 தொடக்கம்

யாழ்ப்பாணம்,
ஸ்ரான்லி வீதி, 253 1/1-ம் இலக்கக்
கட்டிடத்திற்கு மாற்றப்படுகின்றது.

## வெற்றிமணியும்

இதே முகவரியிலிருந்தே வெளிவரும்.

1-4-70 தொடக்கம்

புதிய முகவரிக்கே எழுதுக.

சக்தி அச்சகம் / வெற்றிமணி
253 1|1 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை சக்தி அச்சகத்தினருக்காக, பொன். இராசரத்தினம் அவர்களால், முள்ளியவளை, தண்ணீரூற்றிலுள்ள சக்தி அச்சகத்தில் 15-3-70 ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.